

அ.தி.மு.க. ஓ.பி.எஸ். அணியில் மாநில அமைப்புச் செயலாளரும் தமிழக காங்கிரஸின் மாநில துணைத்தலைவராகவும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினராகவும் எம்.எல்.சி.யாகவும் இருந்த வெங்கடாசலத் தேவர் அவர்களது பேரனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி. வி. ராஜேந்திரன் அவர்களது அண்ணன் மகனும் வேதாரண்யம் முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் பி.வி. குழந்தைவேலு அவர்களது மகனுமாகிய பி.வி.கே. பிரபு திருச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். உடன் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர் மருது அழகுராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



ஆர்.கே.நகர் மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட பொங்கலை முன்னிட்டு அமைப்பாளர் கே.காளிதாஸ் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் தலைமையில் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலையில் நடைபெற்ற கிரிகெட் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, பரிசு தொகையும், கோப்பையும் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் என்.மருதுகனேஷ், மாஸ் டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், வட்ட செயலாளர்கள் மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.எ.எம். சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 330, 331, 332வது நாட்கள்!

## திரு.வி.க.நகர் தெற்கு பகுதி – அம்பத்தூர் வடக்கு பகுதி – கொளத்தூர் மேற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!


சென்னை, ஜன.18-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 330, 331, 332 வது நாட்களாக - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு

15.01.2026 அன்று திரு. வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 76அ, ஸ்டாரன்ஸ் ரோடு சென்னை மாநகராட்சி பள்ளி அருகில் சாய் பாபா ஆலயம் அருகில் 2) வட்டம் 73அ, காந்திநகர் புளியந்தோப்பு, திரு. வி.க.நகர் தொகுதி,

16.01.2026 - நேற்று முன்தினம், அம்பத்தூர் வடக்கு பகுதி:1) வட்டம் 86, தமிழ்நாடு வாழ்வு மேம்பாட்டு வாரியம், ஐ .சி.எஸ் காலனி, 2) வட்டம் 85, சிவானந்த நகர்,

(17.01.2026), நேற்று கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 64அ, ஜம்புலிங்கம் மெயின் ரோடு, G.K.M காலனி 35 வது தெரு, கனரா வங்கி அருகில், 2) வட்டம் 64, சீனிவாசன் நகர் மெயின் ரோடு, டான் பாஸ்கோ பள்ளி அருகில், ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.










இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம். தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன், மீனவரணி பகுதி அமைப்பாளர் தே.ரஞ்சித்குமார், வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.சதீஷ்குமார், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி. ஆர். நாகராஜ், பி.கே. மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல். பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி. ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். எ.நாகராசன், ஐ.சி. எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவ ஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், D.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி. சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி. அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர். ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. தொண்டர் அணி சார்பில் 25 வது வார்டு பெரியார் நகர் 2 வது தெருவில் நடைபெற்ற கோலப்போட்டி மற்றும் உரியடி போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசு மற்றும் நலத்திட்ட உதவிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி வழங்கினார். உடன் செம்பாக்கம் வடக்கு பகுதி கழக செயலாளர் ஏ.கே.கருணாகரன், தொண்டர் அணி அமைப்பாளர் எம்.ஜெயபால், செம்பாக்கம் வடக்கு பகுதி மாணவரணி அமைப்பாளர், டி.ஜோயல், செம்பாக்கம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் மு.அருண்கண்ணன் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியினை செம்பாக்கம் வடக்கு பகுதி தொண்டரணி துணை அமைப்பாளர் ஆர்.அருள் (எ) அருண்குமார் ஏற்பாடு செய்திருந்தார்.



102 (அ) வட்டத்தில் திராவிட பொங்கல் விழாவில் சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் வடக்கு பகுதி102(அ) வட்ட கழக செயலாளர் எம்.ஜி.ரவிக்குமார் தலைமையில் மாவட்ட கழக செயளாலர் நே.சிற்றரசு உத்தரவின் பெயரிலும் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், வடக்கு பகுதி கழக செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் கார்த்திக் மோகன், அண்ணா நகர் தொகுதி பொறுப்பாளர் கௌதமன், தலைமை செயற்குழு உறுப்பினர் சேரன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இவ்விழாவில் வட்ட கழக நிர்வாகிகள் வட்ட இளைஞர் அணி வட்ட மாணவர் அணி, விழாவை ஏற்பாடு செய்து அனைவரும் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசு எத்தனை நெருக்கடி கொடுத்தாலும், தூசி போல தட்டி விட்டு, துணிச்சலுடன்

# பிற மாநில முதல்வர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 18 -

ஒன்றிய அரசு எத்தனை நெருக்கடி கொடுத்தாலும் தூசி போல தட்டி விட்டு பாரபட்சமான நடவடிக்கைகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு பிற மாநில முதல்வர்களுக்கு எடுத்துக்காட்டாக தமிழக முதல்வர் மு,க,ஸ்டாலின் அவர்கள் விளங்குகிறார் என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.



தினகரன்

ஜனவரி 17, 2026 சனிக்கிழமை

தொடரும் துணிச்சல்...!

திருவள்ளுவர் தினத்தையொட்டி, தமிழ்நாட்டு மக்களுக்கு 4 வாக்குறுதிகளை அளித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். சமூக அநீதி மற்றும் மதவாத சக்திகளுக்கு எதிராக போராடும் துணிச்சல் தொடரும் என்பது உள்ளிட்ட 4 வாக்குறுதிகளை தருவதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெளிவுபடுத்தியுள்ளார்.

தை முதல் நாள் பொங்கல் பண்டிகை நேற்று முன்தினம் தமிழர் திருநாளாக உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. மறுநாள் உழவுக்கு உதவிசெய்த மாடுகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக நேற்று மாட்டுப்பொங்கல்

அது வருமாறு:-

திருவள்ளுவர் தினத்தையொட்டி, தமிழ்நாட்டு மக்களுக்கு 4 வாக்குறுதிகளை அளித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். சமூக அநீதி மற்றும் மதவாத சக்திகளுக்கு எதிராக போராடும் துணிச்சல் தொடரும் என்பது உள்ளிட்ட 4 வாக்குறுதி களை தருவதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்.

தை முதல் நாள் பொங்கல் பண்டிகை நேற்று முன்தினம் தமிழர் திருநாளாக உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. மறுநாள் உழவுக்கு உதவிசெய்த மாடுகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக நேற்று மாட்டுப்பொங்கல் கொண்டாடப்பட்டது. மனிதன் அறநெறி கொண்டு வாழவேண்டும் என்று வாழ்க்கைக்கு தேவையான கருத்துகளை ஈரடி குறளில் சொல்லி, முப்பால் தந்து நல்வழிப்படுத்திய திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக ‘திருவள்ளுவர் தினம்’ நேற்று அனுசரிக்கப்பட்டது. இந்நிலையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவள்ளுவர் தினத்தையொட்டி தமிழக மக்களுக்கு 4 வாக்குறுதிகளை அளித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், “அஞ்சாமை மனிதநேயம் அறிவாற்றல் ஊக்கமளித்தல் என வள்ளுவன் சொன்ன இவை நான்கும் நமது ஆட்சியின் அடிநாதம்” என குறிப்பிட்டுள்ளார்.

“’சமூக அநீதி மற்றும் மதவாத சக்திகளுக்கு எதிராக போராடும் துணிச்சல், வறியோர் எளியோர் வாழ்வுயர மனிதநேய திட்டங்கள், இளைய சமூகத்தின் அறிவாற்றலை வளர்க்கும் முன்னெடுப்புகள், தொழில் வளர்ச்சிக்கும், மகளிர் மேம்பாட்டுக்கும் ஊக்கமளிக்கும் ஆக்கப்பணிகள் என இவை நான்கும் தமிழ்நாட்டில் தொடரும் என்பது இந்த திருவள்ளுவர் தினத்தில் உங்களுக்கு நான் தரும் வாக்குறுதி” என தனது நிலைப்பாட்டை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ளார்.

தமிழகத்தில் அடுத்த சில மாதங்களில் சட்டப் பேரவை பொதுத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில், “அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க் கியல்பு” என்னும் அசத்தலான இந்த திருக்குறளை மேற்கோள்காட்டி, 4வாக்குறுதி களை தமிழக மக்களுக்கு அளித்துள்ளார். இது, தி.மு.க. தொண்டர்களை மட்டுமின்றி, ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் உற்சாகப்படுத்தியுள்ளது.

ஒன்றிய அரசின் MGNREGS போன்ற திட்டங்களில் நிதிச்சுமையை மாநிலங்கள் மீது சுமத்துவதையும், நிதி ஒதுக்குவதிலும் பாரபட்சம் காட்டுவதையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையாக விமர்சித்து வருகிறார். கவர்னரை வைத்து மாநில அரசின் உரிமையை முடக்க நினைக்கும் ஒன்றிய அரசின் செயல்பாடுகளை சட்டரீதியாகவும் எதிர் கொண்டு வருகிறார். வலிமையான தேசத்திற்கு மாநிலங்களே அடித்தளம் என்பதை வலியுறுத்தும் வகையில், “ஒன்றிய அரசு” என்ற வார்த்தையை அழுத்தமாக பேசி, மாநில உரிமைகளுக்காக போராடி வருகிறார். ஒன்றிய அரசின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளையும் மிக தைரியமாக எதிர்த்து போராடி வருகிறார்.

ஒன்றிய அரசின் மக்கள் விரோத செயல்பாடுகளை நேருக்கு நேராக எதிர்த்து, குரல் கொடுக்கிறார். சுருக்கமாக, ஒன்றிய அரசின் அடக்குமுறைகளை மீறி, மாநில உரிமைகளை பாதுகாக்கவும், மாநிலங்களின் அதிகாரத்தை பாதுகாக்கவும் தளபதியாக முன்நிற்கிறார். ஒன்றிய பா.ஜ. அரசின் பாரபட்சமான நடவடிக்கைகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு பிற மாநில முதல்வர்களுக்கு எடுத் துக்காட்டாக உள்ளார்.

எத்தனை நெருக்கடி கொடுத்தாலும், அதை தூசி போல் தட்டி விட்டு, தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்காமல் பயணிக்கிறார். இதை, ஒன்றே முக்கால் அடி திருக்குறள் மூலம், சேர வேண்டியவர்களுக்கு கொண்டு போய் சேர்த்துள்ளார்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு 132–வது வட்டத்தில் வட்டச் செயலாளர் ந.மோ. முரளி தலைமையில் கோலப்போட்டியில் வெற்றி பெற்ற மகளிருக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தியாகராயர் நகர் மேற்குப் பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் பரிசுகள் வழங்கினர். உடன் கோடம்பாக்கம் மு.சத்யா, கோ.சு.மணி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### துறைமுகம் மேற்குப் பகுதி

# 54, 54 ‘அ’ வட்டத்தில் பொங்கல் விழா!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு – நடிகை சுஹாசினி மணிரத்னம் பங்கேற்பு!

சென்னை, ஜன. 18-

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதியில் 54 அ வட்டம் சாணி குளம் பகுதியில் 558 பெண்கள் பங்கேற்ற சமத்துவ பொங்கல் விழாவில் நடிகை சுஹாசினி மணிரத்னம், அமைச்சர் மாவட்ட செயலாளர் பி.கே சேகர்பாபு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 54வது வட்டத்தில் உள்ள சாணிகுளம் திருவள்ளூர் மன்றத்தில் வட்டக் கழக செயலாளர் பா கதிரவன் தலைமையில் 16/01/2026 வெள்ளிக்கிழமையான இன்று சாணி குளம் பகுதியில் உள்ள பெண்கள் மற்றும் வட இந்திய பெண்கள் 558 பேர் பங்கேற்ற உறியடி, கோலாட்டம்,மயிலாட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் நடிகை சுஹாசினி மணிரத்னம், அமைச்சர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே சேகர்பாபு அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன்,எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், கேஸ் ரவிச்சந்திரன் தமிழன் பிரசன்னா பி ஸ்ரீராமுலு எம். விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, ஆர். கலைச்செல்வி,,P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: ம. ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி பா.அண்ணாதுரை கே கவியரசு, ஆ.நா.பார்த்திபன், டி.கதிரவன்,எல். சத்தியநாராயணன், எஸ். புகழேந்தி ஆர்.ஏ.அஸ்லாம் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச. சுப்பையா
### சனவரி 16 (1980)



சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் 1971 மற்றும் 1977 ஆகிய இரண்டு முறை கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கழகப் பணியாற்றியவர்.

சங்கரன்கோவில் நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

“எந்த நிலையிலும் நிலை குலையாத – நெருக்கடி காலத்திலும் (மிசா) நிலைமாறாத தம்பிதான் பண்பாளர் ச.சுப்பையா” என தலைவர் கலைஞர் அவர்கள், அவரது இரங்கல் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**